பக்கங்கள் 21 + 2

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 01 வெள்ளிக்கிழமை 18.10.2024 | அதிர்வு 78

## ரணிலின் சேவை நாட்டுக்கு மீண்டும் தேவைப்படலாம்!

**ஐக்கிய தேசியக் கட்சி ஆரூடம்**

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சேவை இந்த நாட்டுக்கு மீண்டும் தேவைப்படலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன 04▸

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வன்னி மாவட்டத்தில் வாக்களிப்பை ஒத்திவைக்கக் கோரி மனுத் தாக்கல்

**உயர்நீதிமன்றத்தை நாடியது ஜனநாயகத் தேசியக் கூட்டணி**

(கி.வசந்தன்)

நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தின் வாக்களிப்பு நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை உத்தரவு வழங்குமாறு கோரி ஸ்ரீ ரெலோ கட்சியின் செயலாளர் ப.உதயராசா தலைமையில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயகத் தேசியக் கூட்டணி தாக்கல் செய்த வேட்புமனுவை நிராகரிப்பதற்கு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரியே உயர்நீதிமன்றத்தல் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 02▸





# தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் ஒற்றுமை இல்லை

**யாழ். மதத் தலைவர்கள் ஆதங்கம்**

(எஸ்.நிதர்ஷன்,
பிரபாகரன் டிலக்சன்)

ஈழத் தமிழ் மக்களுக்காகச் செயற்படுகின்றதமிழ்த் தேசியக் கட்சிகளிடத்தே ஒற்றுமை இல்லை என்று ஆதங்கம் வெளியிட்டுள்ள மதத் தலைவர்கள், தெற்கு போன்று வடக்கு, கிழக்கிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு புதிய தலைமுறை தோற்றம் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் இன்று வெள்ளிக்கிழமை யாழில் மதத் தலைவர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து மதத் 04▸



# ரயில் மோதி யானைகள் பலி!

## போக்குவரத்தும் பாதிப்பு

கல்ஓயாவுக்கும் ஹிங்குரக்கொடவுக்கும் இடையில் எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயிலுடன் மோதி இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்தன.

காட்டு யானைகள் மோதியதில் ரயில் எஞ்சின் மற்றும் 4 எரிபொருள் தாங்கிகள் தடம்புரண்டன என்று அனுராதபுரம் ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது.

கொலன்னாவில் இருந்து மட்டக்களப்புப் நோக்கி பயணித்த ரயில் மின்னேரியா 146 ஆவது மைல்கல் பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் விபத்துக்குள்ளானது.

இதனால் மட்டக்களப்பில் இருந்து புறப்பட்ட மீனகயா கடுகதி ரயில் பொலனறுவையில் நிறுத்தப்பட்டது.

இன்று காலை கொழும்பு கோட்டையில் இருந்து மட்டக்களப்பு வரை பயணிக்கவிருந்த ரயிலும் இரத்துச் செய்யப்பட்டது என்றும் ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது.

இதேவேளை, இன்று காலை 6.10 மணிக்கு மட்டக்களப்பில் இருந்து கொழும்பு - கோட்டை நோக்கிப் பயணிக்கும் ரயிலும் இரத்துச் செய்யப்பட்டது.

# அவசர முக்கிய அறிவித்தல்

(எஸ்.நிதர்ஷன்)

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு/சேதம் காரணமாக உடனடியாக அவசர திருத்த வேலைகள் நடைபெறவுள்ளதால் இன்று (18) நண்பகல் 12 மணியிலிருந்து 3 நாட்களுக்கு இந்தப் பாலத்தினூடாக கனரக வாகனங்களின் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அறிவித்துள்ளார்கள்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் சிற்றூர்தி சேவையில் பயணிக்கும் பயணிகள் மாத்திரம் பயணித்து சில இடங்களில் இறங்கி நடந்து செல்ல வேண்டிய தேவைப்பாடு உள்ளது என்றும், மேலும் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டி நோயாளர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அறியத்தந்துள்ளார்.

மேலும், கனகர வாகனங்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளதால் மாற்றுப் பாதையைப் பயன்படுத்துமாறும், பாதைக்கான திருத்த வேலைகள் விரைவாகப் பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் குறித்த தினத்துக்கு முன்னர் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படும் என்றும் அரச அதிபர் அறிவித்துள்ளார்.




## வன்னி மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத் தேசியக் கூட்டணி கட்சியைச் சேர்ந்த வன்னி மாவட்ட வேட்பாளர் ப.உதயராசா மற்றும் மூவரால் சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் ஊடாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், வன்னி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி உள்ளிட்ட சிலர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

தாம் வன்னி மாவட்டத்துக்காக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியிடம் வேட்புமனுவைக் கையளித்தனர் என்று மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். அந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த வேட்புமனு முறையாக முன்வைக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டு அதனை ஏற்றுக்கொள்வதை அவர் நிராகரித்தார் என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அனைத்து ஆவணங்களும் முறையாக முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், தமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை சட்டத்துக்கு முரணானது என்பதால் அந்தத் தீர்மானத்தை வலுவற்றதாக்கும் ரிட் எழுத்தாணையை பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

அத்துடன், மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை வன்னி மாவட்டத்துக்காக எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள வாக்கெடுப்பை இடைநிறுத்தும் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் தமது மனுவில் கோரியுள்ளனர்.



# நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் கிராம அலுவலர்களுக்குச் செயலமர்வு

வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல்கள் தொடர்பாக கிராம அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வு யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும், முற்பகல் 11 மணிக்கும் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது.



இதன்போது தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர், நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கடமைக்குச் சிறப்பான ஒத்துழைப்பு வழங்கிய கிராம அலுவலர்களுக்கு தமது நன்றியைத் தெரிவித்தார்.

மேலும், இந்தக் கலந்துரையாடல் ஒரு பின்னூட்டலாகவே நடைபெறும் எனவும், ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் கற்றுக்கொண்ட பாடங்களுக்கமைய நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் கடமைகளில் வினைத்திறமையாக பங்களிப்பை வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் செல்லுபடியற்ற வாக்குகள் அதிகமாகவிருந்த காரணத்தால் வாக்காளர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளைப் பிரதேச செயலக ரீதியாக வெளிக்கள உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதால் அதற்கான ஒத்துழைப்பையும் கிராம அலுவலர்கள் வழங்குமாறும் அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக வாக்களிப்பு நிலையங்களில் கிராம அலுவலகர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உதவி தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் விளக்கமளித்தார். இந்தச் செயலமர்வில் அனைத்து கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் கலந்து கொண் டனர்.







# யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபருடன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திப்பு

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபனுக்கும் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூஸன் சூரிய பண்டாரவுக்கும் இடையிலான சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்தும், நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்குப் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூர்யா விஜயம் மேற்கொண்டு பொலிஸ் பொறுப்பதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ள ஏற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி. அமல்ராஜ், யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமைப்பீட பொறுப்பதிகாரி சம்லி பலுசேன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது தனி ஒரு ஆளாக சவாலை ஏற்றவர்தான் ரணில் விக்கிரமசிங்க. அவர் அன்று சவாலை ஏற்றதால்தான் மக்கள் வாழக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு நாட்டை ஆள்வதற்குரிய அனுபவம் குறைவு. எனவே, நாட்டைச் சரியாக வழிநடத்த முடியாமல் பொருளாதாரம் மீண்டும் சரிந்தால், அந்தச் சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் இந்த நாட்டுக்குத் தேவை." - என்றார்.



## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாட லின்போதே மதத் தலைவர்கள் இவ் வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணத்திலுள்ள நல்லை ஆதீன குரு முதல்வர் மற்றும் யாழ். ஆயர் ஆகியோரைச் சந்தித்து ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டோம். அவர்களுடைய ஆசீர்வாதத்துடன் நாம் எமது பிரச்சாரப் பணிகளை முன்னெடுக்கவுள்ளோம்.

குறிப்பாக யாழ். ஆயருடனான சந்திப்பின்போது எங்களுடைய அரசியலிலே முற்று முழுதான மாற்றம் வர வேண்டும் என்று ஆயர் குறிப்பிட்டார். அதேபோன்று தமிழ் மக்களும் முற்று முழுதான மாற்றத்தைக் கொண்டு வருவார்கள் என்று நாங்களும் எதிர்பார்க்கின்றோம்.

இதேபோன்று நல்லை ஆதீனத்தை நாங்கள் சந்தித்தபோது மத்திய அரசின் செயற்பாடுகள் அதிருப்தி அளிப்பதாக உள்ளது எனக் கூறினார்.

குறிப்பாக இப்போது ஆட்சிக்கு வந்துள்ள அநுரகுமார தலைமையிலான ஆளும் கட்சியினர் ஆரம்பத்தில் தமிழ் மக்களுக்கு அதை, இதை செய்யப் போவதாக கூறியிருந்தாலும் இப்போது அதிலிருந்து பின்வாங்கிக் கொண்டு இருக்கின்றார்கள் என்ற அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

இதேவேளை, தமிழர் தரப்பிலுள்ள கட்சிகள் மத்தியில் ஒற்றுமை வேண்டும் என்றும், நல்லதொரு மாற்றம் வர வேண்டும் என்றும், புதிய தலைமுறை தோற்றம் பெற வேண்டும் என்றும் இரண்டு சமயத் தலைவர்களும் வெளிப்படுத்தியுள்ளார்கள்." - என்றார்.



# சர்வமதத் தலைவர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்ற மணி குழுவினர்

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர்கள் சர்வமதத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடி ஆசீர்வாதம் பெற்றனர்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் சட்டத்தரணி வி.மணிவண்ணண் தலைமையில் தமிழ் மக்கள் கூட்டணி கட்சி ‘மான்’ சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இதற்கமைய கட்சியின் முதன்மை வேட்பாளரான மணிவண்ணண் தலைமையில் போட்டியிடும் வேட்பாளர்கள் நல்லை ஆதீன குருமுதல்வர் மற்றும் யாழ் ஆயர் உள்ளிட்ட சர்வ மதத் தலைவர்களைச் சந்தித்தனர்.

இன்று முற்பகல் 10 மணியளவில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகளை அவர்கள் சந்தித்து ஆசீர்வாதங்களைப் பெற்றனர்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்குச் சென்று யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசத்திடம் ஆசீர்வாதங்களைப் பெற்றனர்.

இதன்போது தேர்தல் நிலைமைகள் தொடர்பில் அவர்கள் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எது சம நீதி?

ஆளும் தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க வவுனியாவில் வைத்து தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் சில கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் கலாசார உரிமைகள் ஒழுங்காகப் பாதுகாக்கப்படவில்லை, அதை ஏற்றுக் கொள்கிறோம். அதனைப் பாதுகாப்பதற்காகவே 13 ஆவது திருத்தம் இந்தியாவால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆயினும் அதனால் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்று பிமல் ரத்நாயக்க கூறியிருக்கிறார்.

இந்த நாட்டில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழர்களுக்கு அரசியல், கலாச்சார அசாதாரணங்கள் ஏற்பட்டிருக்கின்றமையை ஒப்புக் கொள்கின்றோம் என்றும் அவர் சொல்லி இருக்கின்றார்.

இலங்கையில் அனைவருக்கும் சமமான உரிமை உண்டு என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம் என அவர் வவுனியாவில் வைத்துக் குறிப்பிட்டு இருக்கின்றார்.

சகலருக்கும் சம உரிமை என்பதை ஒரு தீர்வு போல அவர் பிரேரித்தும் இருக்கிறார்.

இவற்றை நோக்கும் போது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக அவரும், அவரது தேசிய மக்கள் சக்தியினரும், ஏனைய தென்னிலங்கைத் தரப்பினர் போல தவறான புரிதலுடன்தான் இந்தப் பிரச்சினையை நோக்குகிறார்கள் - அணுகுகின்றார்கள் - என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

‘தேசிய இனப் பிரச்சினைக்கு இந்த நாட்டில் எல்லா மக்களுக்கும் சமத்துவமான சமமான உரிமை என்ற அடிப்படையில் தீர்வு’ என்ற பொத்தம் பொதுவான பேச்சு எண்பதுகளில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் இருந்தே பேசப்படும் உப்புச் சப்பற்ற தத்துவம்தான்.

இலங்கை இனப் பிரச்சினையின் சிக்கல்களை - அதன் ஆழமான வேரோடல்களை - புரிந்து கொள்ளாமல் மேலோட்டமாக, தந்திரமாக அல்லது புரிதல் இன்றி, பேசும் தீர்வு வாக்கியமாக இது எப்போதும் இருக்கிறது.

இலங்கைத் தீவு வரலாற்றுக் காலம் முதலே இரண்டு தேசியங்களின் ஆழமான வேரோடல்களைக் கொண்ட இரு பிராந்தியங்களின் ஒன்றிப்பு என்பதை புரிந்து கொள்ளாமல் பேசும் விடயங்கள் இவை.

தெற்கில் பௌத்த - சிங்கள காலத்துடன் ஒரு தேசியம் - தேசம் - நீண்ட காலமாக நிலைத்து, நீடித்து வருவது போல, வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்திலும் தமிழ்த் தேசியத்துடன் ஒரு தனித்துவமான கலாசார ஆட்சி முறை இந்தத் தீவில் நீடித்து வந்தது என்ற யதார்த்தத்தை புரியாமல், ‘சகலருக்கும் சம நீதி’ என்ற பொருத்தமற்ற தீர்வுத் தத்துவம் இலங்கை விவகாரத்தில் ஆட்சி தரப்புகளினால் அவ்வப்போது ஒரு வழிமுறையாக முன்வைக்கப்பட்டு வருகிறது.

தெற்கில் தமது கலாசாரத்தை - வரலாற்றை - தனித்துவத்தை - மொழியை - பாரம்பரியத்தை - வழக்காறுகளை - தொடர்ந்து பேணி, தங்கள் தனித்துவ அடையாளத்தை தக்க வைப்பதற்கு பௌத்த, சிங்களவர்களுக்கு இருக்கின்ற அதே போன்ற தனித்துவ உரிமைகள் வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் தமிழர்களுக்கு விசேடமாக உறுதிப்படுத்த வேண்டும். அதுதான் சமனான - சமத்துவமான - சமரச - நீதியாக இருக்க முடியும்.

தென்னிலங்கை தன்னுடைய வரலாற்று வேரோடல்களை தொடர்ந்து பேணுவதற்குத் தனக்காக ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒழுங்குகளை வடக்கு - கிழக்கு தமிழர் தாயகமும் தனக்காக ஏற்படுத்திக் கொள்வதை உறுதிப்படுத்துவதே சமத்துவமான நீதியாக இருக்க முடியும்.

அதைப் புரிந்து கொள்ளாமல், தெற்கில் இருப்பதை வடக்கில் இருக்கும் சாதாரண மனிதனும் அனுபவிப்பதை உறுதிப்படுத்த முயல்வதின் பெயர் சமநீதி அல்ல.

தங்கள் வரலாற்றித் தனித்துவத்தை தொடர்ந்து பேணி உறுதிப்படுத்துவதற்கான முறைமையைத்தான் தென்னிலங்கைக்கு சமமான நீதியாக தமிழர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தெற்கிலிருந்து வடக்கு கிழக்குக்கு வந்து அரசியல், நீதி, தத்துவம், சமரசம், இணக்கம் பற்றிப் பேசுகின்ற பிமல் ரத்நாயக்கா போன்ற தலைவர்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.



# விளையாட்டு வளாக உள்ளக அரங்கும் நீச்சல் தடாகமும் இன்று திறந்து வைப்பு

(கி.வசந்தன்)

வவுனியா – ஓமந்தையில் மாவட்ட விளையாட்டு வளாக உள்ளக அரங்கு மற்றும் நீச்சல் தடாகம் என்பன இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப் பட்டன.வவுனியா, ஓமந்தைப் பகுதியில் மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத்சந்திர மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் இதனைத் திறந்து வைத் தனர்.



இதன்போது சான்றிதழுடனான உயிர் காப்பு மற்றும் நீச்சல் பயிற்சி வகுப்புகள், கடினப் பந்து பயிற்சி வகுப் புகள் என்பன ஆரம்பித்து வைக்கப் பட்டன. வவுனியாவில் ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் தங்கள் திறமைகளை மேம்படுத்துவதற்கு இது தனித்துவமான வாய்ப்பாக அமைய உள்ளமை சிறப்பம்சமாகும்.

விளையாட்டுப் பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உட்படப் பலர் இதில் கலந்துகொண்டனர்.














# யாழ். வடமராட்சி வாழ் மக்களின் கலை, கலாசாரத்தை பறைசாற்றிய பண்பாட்டு ஊர்திப் பவனியின் காட்சிகள்

யாழ்ப்பாணம், வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பண்பாட்டு விழாவில் வடமராட்சி வாழ் மக்களின் கலை, கலாசாரத்தைப் பறைசாற்றிய பண்பாட்டு ஊர்திப் பவனியின் காட்சிகள்.....























# மலையகத்தின் இதயம் நுவரெலியாவில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் கட்டாய தேவை!

## மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவிப்பு




(க.கிஷாந்தன்)

மலையக மக்களின் அரசியல் இருப்பை தீர்மானிக்கும் மிக முக்கிய மாவட்டமே நுவரெலியா மாவட்டமாகும். மலையகத்தின் இதயமெனக் கருதப்படுகின்ற இந்த மாவட்டத்தில் எமக்கான தமிழ்ப் பிரதிநிதித்துவம் கட்டாய தேவையாகும்.

எனவே, மக்களுடன் இருக்கும் எம்மை மக்கள் நிச்சயம் ஆதரிப்பார்கள், ஆணை வழங்குவார்கள் என்ற உறுதியான நம்பிக்கை உள்ளது என்று இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் நாம் தனித்துவமாகக் களமிறங்கியுள்ளோம். தேசியப் பட்டியலில் எம்மவர்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

தலவாக்கலை மடக்கும்புர பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

மலையக மக்களின் அரசியல் இருப்பென்பது மிக முக்கியம். எனவே, நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் வாழும் மக்கள் நன்கு சிந்தித்து வாக்களிக்க வேண்டும். நமக்குரிய அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

மாற்றம் வேண்டுமெனக் கூறி சிலர் வந்துள்ளனர். அவர்களை நம்பினால் கடைசியில் ஏமாற்றம்தான் ஏற்படும். அது தனி நபருக்கு ஏற்படும் தோல்வி அல்ல, ஒரு சமூகத்தின் தோல்வியாக மாறிவிடும்.

கடந்த பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் இருந்து ஐந்து தமிழர்கள் நாடாளுமன்றம் சென்றிருந்தோம். அதில் நானும், எமது பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானும் ஆளுங்கட்சியில் இருந்தோம். கடந்த ஒரு வருட காலப்பகுதியில் பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கல்வித்துறைக்கு நாம் அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளோம்.

எமது சமூக முன்னேற்றத்துக்கு கல்வியே சிறந்த ஆயுதம். அதனால் தான் கல்விக்கு முன்னுரிமை வழங்கினோம்.

தேர்தலில் வெல்ல முடியாது என தெரிந்தும் சிலர் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். நான்கு வருடங்களுக்கு முன்னர் மலையகம் வந்து சென்றவர்கள், தற்போதுதான் மீண்டும் வருகின்றனர். எனவே, அவர்களின் நோக்கம் என்னவென்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் மக்களோடு மக்களாக வாழ்கின்றோம். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின்போது அவற்றுக்குத் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு குரல் கொடுத்துவருகின்றோம். எனவே, எம்மை நாடாளுமன்றம் அனுப்பு வையுங்கள்.

யானைச் சின்னமென்பது மலையக மக்களுக்கு நன்கு பரீச்சயமான சின்னம். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நாம் தனித்துமாக போட்டியிடுகின்றோம். நானும், எமது பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானும், சக்திவேலும் போட்டியிடுகின்றோம். எம்மை நாடாளுமன்றம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். – என்றார்.



# மதுபானசாலை விவகாரம் நிரூபிக்கப்பட்டால் அரசியலில் இருந்து ஒதுங்குவதற்குத் தயார்!



## அங்கஜன் அதிரடி அறிவிப்பு

(த.சுபேசன்)

மதுபானசாலை விவகாரத்தில் தொடர்ந்தும் ஆதார பூர்வமற்ற தகவல்களுக்குச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஆதாரத்தோடு நிரூபித்தால் அரசியலில் இருந்து ஒதுங்கவும் தயார்.

இவ்வாறு அங்கஜன் இராமநாதன் அதிரடியாக அறிவித்துள்ளார்.

நேற்று (17) வியாழக்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

கடந்த ஆட்சிக் காலத்தில் நாம் புதிய மதுபானசாலைக்கான அனுமதியை அரசிடமிருந்து பெற்றுக் கொண்டதாக பல்வேறு தரப்புகளாலும் முன்வைக்கப்படுகிற ஆதாரப்பூர்வமற்ற தகவல்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க தயாராகி வருகிறோம்.

தற்போது நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டு அதன் அடுத்த படியாக நாடாளுமன்ற தேர்தலை நோக்கி நாடு நகர்ந்து செல்கிறது.

இந்த நிலையில் என் மீதும் எனது தந்தையார் மீதும் பழி சுமந்து நோக்கில் சிலர் எந்த விதமான ஆதாரமும் அற்ற வீண் குற்றச்சாட்டுகளை தமது சுயலாப அரசியல் தேவைகளுக்காக முன் வைத்து வருகின்றனர்.

இந்த ஆதார பூர்வமற்ற குற்றச்சாட்டுகளை முன் வைப்பது யார் என பார்த்தால், கடந்த காலத்தில் எம்மோடு நேரடியாக போட்டி போட்டு வெல்ல முடியாதவர்களே இவ்வாறான பொய் குற்றச்சாட்டுகளை பரப்பி வருகின்றனர். ஒரு சில அரசியல்வாதிகளும், எமது சமூக சேவைக்கு ஈடுகொடுக்க முடியாதவர்களுமே இவ்வாறு பொய்யாக வாய்க்கு வந்தபடி பேசி வருகின்றனர்.

இவ்வாறானவர்களின் அர்த்தமற்ற பேச்சுகளுக்கு பதில் கூற வேண்டிய தேவை எமக்கில்லை. ஆனாலும் எம் மக்களை தெளிவுபடுத்த வேண்டிய தேவை நமக்கு உண்டு. அதனால்தான் சத்திய கடதாசி ஊடாக நாம் எமது ஆதாரங்களை முன்வைத்து, புதிதாக எந்த ஒரு மதுபானசாலை அனுமதியையும் அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளவில்லை என்பதை மக்களுக்கு நிரூபித்துள்ளோம்.

எனது தந்தையார் ஒரு தொழிலதிபர். அவருக்கு நான் ஆறு வயதில் இருக்கும்போதே மதுபான சாலை அனுமதி பத்திரம் இருந்தது. எனக்கு 17 வயதாகும் போது எனது தந்தையாருக்கு நான்கு மதுபான சாலைகளுக்கான அனுமதி பத்திரங்கள் இருந்தன. யுத்தகாலத்தில் அவை இயங்காத நிலையில் அவை புதுப்பிக்கப்படாமல் இருந்தன. நீண்ட காலமாக இயங்காத மதுபான சாலைகளுக்கான அனுமதி பத்திரங்களை புதுப்பித்தல் செய்வதற்கு, அப்போதைய அரச கொள்கைகளுக்கமைய சட்ட ஏற்பாடுகள் இல்லாத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் 2021 ஆம் ஆண்டு மதுபான சாலைகளுக்கான புதிய அனுமதிகள், மற்றும் பழைய அனுமதி பத்திரங்களை புதுப்பித்தல் தொடர்பான அரச கொள்கை மாற்றங்களைத் தொடந்து, எனது தந்தையாரால் கடந்த 2021 ஆம் ஆண்டு ஏற்கனவே இருந்த மதுபான சாலைகள் இரண்டைப் புதுப்பிக்க மேல்முறையீடு செய்யப்பட்டு அதில் ஒரு அனுமதி பத்திரம் புதுப்பிக்கப்பட்டுள்ளது மற்றையது பரிசீலனையில் உள்ளது.

இவற்றை பெறுவதற்கு எனது சிபாரிசை எனது தந்தையார் எந்த ஒரு மதுபானசாலை அனுமதிக்காகவும் கோரவில்லை. அவை அரசு சுற்று நிரூபத்துக்கு அமைய தகுதி உள்ளது என்று தீர்மானிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

எனவே எம்மிடம் இவ்வாறான அனைத்து ஆதாரங்களும் உள்ள போதிலும் சிலர் தமது சுயலாபத்துக்காகச் சுயலாப அரசியல் நோக்கத்துக்கான இத்தகைய பொய் குற்றச்சாட்டுகள் முன்வைக்கின்றனர். எதிர்காலத்திலும் திட்டமிட்டு பரப்பப்படுமானால், பரப்பும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு இவ்வாறு பொய் குற்றச்சாட்டை முன்வைக்கும் நபர்கள் அதனை ஆதாரத்தோடு முன் வைத்தால் அரசியலில் இருந்து அந்தத் தருணமே விலகுவேன் என்பதை உறுதியாக கூறிக்கொள்கிறேன்.

ஒரு சிலர் தாங்கள் வாய் வீரர்கள் என்பதனை தொடர்ந்து நிரூபித்து வருகின்றனர். அவர்களால் ஒருபோதும் செயல் வீரர்களை வீழ்த்த முடியாது. – என்றுள்ளது.





# உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் மட்டக்களப்பில் கலந்துரையாடல்!

(பழுவூரான்)

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி ஜஸ்டீனா முரளிதரன் தலைமையில் உயர் பொலிஸ் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் பழைய மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்றது.

மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எ.எம். சபியானின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தேர்தல்களின் போது பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது தெளிவூட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பொலிஸ் பொறுப்பதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும்

## நுவரெலியா மாவட்ட வேட்பாளர் ஜீவன் தொண்டமான்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மலையகத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படவேண்டும்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்ரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நேற்று (17) வியாழக்கிழமை தலவாக்கலை ஹொலிரூட் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான்,



விமர்சனங்கள் பல இருந்தாலும் நான்கு வருடகாலமாக மக்களுக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தேன். அதேபோல் மக்களின் பிரச்சினைகளுக்குக் களத்தில் இறங்கி நான் குரல் கொடுத்திருக்கின்றேன்.

எந்த இடத்திலும் நான் ஓடி ஒழியவில்லை. நாடு வங்குரோத்து அடைந்த போது கூட, மலையகத்தைப் பொறுத்தவரையில் இரண்டு சம்பள உயர்வுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

2020 ஆம் ஆண்டு சொன்னது 1000 ரூபா சம்பளத்தை பெற்றுக்கொடுத்தோம். 2024 ஆம் ஆண்டு சம்பள நிர்ணய சபை ஊடாக 1350 சம்பளத்தை பெற்றுக் கொடுத்தோம். இது கூட்டு ஒப்பந்தத்தினூடாக அல்ல. சம்பள நிர்ணய சபையில் தொழிலாளர்களுக்கு 1350 சம்பளம் கொடுக்க கூடாது என தற்போதைய ஜனாதிபதியின் தொழிற் சங்கங்கமே எமக்கு எதிராக வாக்களித்தார்கள்.

ஆரம்ப காலம் முதல் நான் சொல்லி வருவது, எம்மிடம் இருப்பது 10 ஆயிரம் வீடுகள். ஆனால் 10 ஆயிரம் வீடுகளை வைத்து ஆறு அரசியல்வாதிகள் ஒன்றை லட்சம் பேரை ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

நுவரெலியா மாவட்டத்தில் இந்த முறை 30 சுயாதீன கட்சிகள் சுயேட்சையாக களமிறங்கியுள்ளன. எந்தக் கட்சியாக இருந்தாலும் தமிழ் பிரதி நிதித்துவத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நான் வரலாற்றை வைத்துக்கொண்டு உங்களிடம் வாக்கு கேட்டு வரவில்லை. எனது பாட்டனாரின் பெயரையோ எனது தந்தையின் பெயரையோ இங்கு பயன்படுத்தவில்லை. நான் உங்களுக்கு செய்த சேவையின் பொருட்டே நாங்கள் உங்களிடம் வருகின்றேன்.

நாங்கள் இந்த அரசைப் பொறுப் போற்கும்போது நாட்டில் பொற்காலம் கிடையாது. அது மிகவும் கஷ்டமான காலம். நாடு கொரோனாவில் மூழ்கியிருந்தது. அதன் பின்னர் நாடு பெரும் பொருளாதார பின்னடைவை சந்தித்தது. இந்த நெருக்கடிக்கு மத்தியில் மக்களை பாதுகாக்க வேண்டியிருந்தது.

நுவரெலியா மாவட்டத்தில் இந்த முறை தேர்தலில் போட்டியிடுகின்ற பட்டியலை எடுத்து நோக்கினால் புரொட்டொப் தோட்டப் பகுதியில் முகாமையாளராக இருந்து தொழிலாளர்களை தாக்கியவர் தான் நுவரெலியா மாவட்டத்தில் பிரதான வேட்பாளர். நாட்டை மீட்டெடுத்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் தூக்கி எறிந்து விட்டார்கள். அதேபோல் எம்மையும் தூக்கிப் போடாமல் இருந்தால் சரி.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸால் மட்டுமே மலையகத்தில் பல்வேறு அரச நியமனங்கள் பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளன. அந்தவகையில் ஆசிரியர் நியமனங்கள், உதவி ஆசிரியர் நியமனங்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பல்வேறு நியமனங்களை பெற்றுக் கொடுத்தோம். மலையக மக்களுடைய வாக்குகளைச் சிதறடிக்க முயற்சி செய்கின்றனர். குடும்ப அரசியலுக்கு எதிர்ப்பு என கூறியவர்கள் களுத்துறை மாவட் டத்தில் தந்தையும் மகனும் போட்டியிடுகின்றனர். எனது குடும்பத்தில் நான் மட்டுமே போட்டியிடுகின்றேன். எமது வாக்குகளை வீணடிக்காதீர்கள்.

கடந்த நான்கரை வருடகாலமாக நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சிக்கலுக்கு மத்தியில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். தற்போதைய ஜனாதிபதி பெரும்பான்மை வாக்கில் வெற்றி பெறவில்லை. அவர் 44 வீத வாக்குகளையே பெற்றார். ஜனாதிபதியால் 113 பெரும்பான்மையை நாடாளுமன்ற தேர்தலில் பெறமுடியாது. அதனாலேயே சிறுபான்மைக் கட்சிகளை உடைக்க முயற்சிக்கின்றார்.

வடக்கு, கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பையே இல்லாமல் போய்விட்டது. வடக்கு, கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவம் கிடைப்பதே பெரும் கேள்வி குறியாகியுள்ளது. எனவே நுவரெலியா மாவட்டத்தில் எமது தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வேண்டும்.

எனவே எமது மக்கள் நன்கு சிந்தித்து வாக்களியுங்கள். நுவரெலியா மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் யானை சின்னத்தில் இலக்கம் 4 இல் ஜீவன் தொண்டமானாகிய நானும் இலக்கம் 6 இல் பழனி சக்திவேல், இலக்கம் 7 இல் மருதபாண்டி ரமேஸ்வரனும் போட்டியிடுகின்றோம். எனவே உங்கள் வாக்குகளை எமக்கு அளித்து நுவரெலியா மாவட்டத்தில் எங்களை அமோக வெற்றி பெறச் செய்யுங்கள்.- என்றார்.




# அம்பாறை மாவட்ட தமிழர்களின் இருப்பு அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டும்!

## சங்கு வேட்பாளர் புஸ்பராஜா அறைகூவல்

( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட தமிழர்களின் இருப்பு, அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக இந்த தேர்தல் களத்தில் குதித்துள்ளேன். அனைவரையும் சிந்தித்துச் செயற்படுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சோ.புஸ்பராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏனைய மாவட்டங்களைவிடவும் அம்பாறை மாவட்ட அரசியல் சூழ்நிலை வித்தியாசமானது. இங்கு தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். இங்குள்ள தமிழர்கள் சிறுபான்மையிலும் சிறுபான்மையாக உள்ளார்கள். திருகோணமலையும் இதே நிலைதான். அதிலும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகளும், சில இனவாத இஸ்லாமிய அரசியல்வாதிகளால் எதிர்நோக்கும் இன்னல்களும், அடக்குமுறைகளும், ஆக்கிரமிப்புக்களும், அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதும் யாவரும் அறிந்த விடயமே.

தமிழ் மக்கள் ஏனைய இனங்களுடன் சமமாகச் சகோதரத்துடன் வாழவே விரும்புகின்றனர். ஆனால், சில இனவாத இஸ்லாமிய அரசியல்வாதிகளும் அடிப்படைவாதிகளும் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களின் கலை கலாசார விழுமியங்களை அழிக்கும் செயற்பாடுகளையும் தமிழரின் வளங்களைச் சுரண்டும் செயற்பாடுகளையும் கைவிட்டதாக இல்லை. இதற்குச் சான்



றாகப் பல தமிழ்க் கிராமங்களில் இருந்து தமிழ் மக்கள் விரட்டப்பட்ட வரலாறுகளும் படுகொலைகளும் உள்ளன.

தற்போதும் மதமாற்றங்கள் நில ஆக்கிரமிப்புக்கள் தொடர்ந்து கொண்டு உள்ளமை கவலையானதே. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் அரச சேவையை பெறுவது இந்த பிரதேச மக்களின் அடிப்படை உரிமை. இதனைக் கூட முழுமையாக பெறுவதற்கு முட்டுக்கட்டையாக நிர்வாக பயங்கரவாதம் நிகழ்வது இனியும் தொடரக்கூடாது.

அனைவரும் இந்த நாட்டின் பிரஜைகளே அரசுடன் பேரம் பேசி எமது அடிப்படை உரிமையை பெறுவது - நிர்வாகத் தடங்கல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து எமது மக்களின் கலை கலாசாரம் பண்பாடு விழுமியங்களை இருப்பை அம்பாறை மாவட்டத்தில் பாதுகாக்க வேண்டியது – எமது கடமையாகும்.

வருங்கால சந்ததியினருக்கு எமது இருப்பை அடையாளத்தை பாதுகாத்து கொடுக்க வேண்டியதும் நாம் எல்லோரதும் கடமையாகும். இதுவே இன்றைய இளைஞர்களதும் அவாவாகவும் உள்ளது.

ஏனைய சமூகங்களுடன் சமத்துவமாக வாழ்ந்த தமிழ் சமூகம் ஏனைய சமூகங்களால் பாதிக்கப்பட்டு இன்று அரசியல் அநாதைகளாக இருப்பதற்கு யார் பொறுப்பு?

இந்த நிலை இனியும் தொடரக் கூடாது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவே நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் உங்களில் ஒருவனாக நான் களத்தில் இறங்கியுள்ளேன்.

எமது இருப்பை பாதுகாத்து நாளைய தலைவர்களான இளைஞர்களிடம் ஒப்படைக்க வேண்டும் அதற்கான இந்த கள முயற்சிக்கு ஒற்றுமையாக அனைவரும் என்னுடன் இணையுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

நாங்கள் இன்னொரு சமூகத்தின் இருப்பையோ கலை கலாசாரங்களையோ அபகரிக்கவில்லை. அபகரிக்கப்போவதும் இல்லை. சில இனவாத அரசியல்வாதிகள் எமது கலை கலாசாரங்கள் மீது அச்சுறுத்தல் செய்து இனங்களுக்கிடையில் முரண்பாட்டை இனவாதத்தை தோற்றுவித்து அரசியல் செய்ய ஒரே மொழி பேசுகின்ற இஸ்லாமிய சகோதரர்கள் இடமளிக்க கூடாது.

எங்களது மக்களின் இருப்பை பாதுக்காக்கவும் சமூக கட்டமைப்பை வளப்படுத்தவும் எப்போது தடைகள் வருகிறதோ இந்த தடைகளை உடைத்தெறியும் சக்தி எம்மிடம் இருக்க வேண்டும். இளைஞர்களே இந்த சமூகத்தின் வழிகாட்டிகளாக வேண்டும்.

அம்பாறை மாவட்ட பிரஜை எனும் ரீதியில் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இளைஞர்கள் தீர்க்கமான முடிவெடுத்து கடந்த கால தேர்தல்களில் விட்ட பிழைகளை விடாது, ஒற்றுமையாக அம்பாறை மாவட்டத்தின் நிலையில் எவ்வாறான நாடாளுமன்ற உறுப்பினர் வர வேண்டும் என்று நீங்களே சிந்தித்து முடிவெடுங்கள்.- என்றார்.

# கரப்பந்தாட்ட அணியினருக்கு இலவசமாக சீருடை வழங்கல்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை சித்ரா நகையக உரிமையாளர் விஜேந்திரனின் நிதி அனுசரணையில் தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலை கரப்பந்தாட்ட அணியினருக்கு இலவசமாக சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது தலவாக்கலை சித்ரா நகையக உரிமையாளர் விஜேந்திரன் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். பாரிஸிடம் சீருடைகளை கையளித்தார்.

இந்த நிகழ்வில் தலவாக்கலை சித்ரா நகையக உரிமையாளர் விஜேந்திரன், பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.



# அரசியல் பலத்துடன் வீட்டுக்கு ஒரு பட்டதாரி; சமூக மாற்றம் பெறுவதற்கு உருவாக்குவோம்!

## யானைச் சின்ன வேட்பாளர் சதானந்தன் திருமுருகன்

(ஆ.ரமேஸ்)

சமூக மாற்றம் பெற அரசியல் பலத்துடன் வீட்டுக்கு ஒரு பட்டதாரியை உருவாக்குவோம். பெருந்தோட்ட பகுதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பட்டதாரியை உருவாக்க வேண்டும் என்பதை எனது “மலரும் மலையகம்” அமைப்பு இலக்காக கொண்டு செயற்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகளை அமைப்பின் தலைவராக இருந்து நான் முன்னெடுத்து வருகிறேன்.

இவ்வாறு வேட்பாளர் சதானந்தன் திருமுருகன் தெரிவித்தார்.

இம்முறை பொது தேர்தலில் யானை சின்னத்தில் இலக்கம் 09 இல் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் நுவரெலியா மாவட்ட வேட்பாளராக களம் இறங்கியுள்ள சதானந்தன் திருமுருகனின் வேட்பாளர் அறிமுகம் அவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று முன்தினம் (16) இடம்பெற்றது.

இந்த அறிமுக நிகழ்வில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பெருந் தோட்ட சமூகத்தில் கல்வி புரட்சியை ஏற்படுத்துவதன் மூலமே இச் சமூகத்தில் ஒரு மாற்றத்தை கொண்டுவரமுடியும்.

நாட்டுக்கு பொருளாதாரத்தில் ஒரு பகுதி சக்தியை வழங்கும் உண்ணத மக்களாக பெருந்தோட்ட தொழிலாளர்கள் திகழ்கின்றார்கள் என்பதற்கு மாற்று கருத்துக்கள் இல்லை.

200 வருடகால வாழ்வியல் வரலாற்றை கொண்டுள்ள மலையக பெருந்தோட்ட மக்கள் படிப்படியாக கல்வி ஊடாக புதிய வாழ்வியல் பரிமாற்றத்தை அடைந்து வருகின்றமையை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இருப்பினும் இந்த மக்களுடைய மாற்றத்தின் சக்தி கல்வியில் தங்கியுள்ள நிலையில் கல்வியின் முன்னேற்றம் முழுமை பெறவேண்டும் என்பது எனது குறிகோளாகும்.

அந்த வகையில் எமது நுவரெலியா மாவட்டத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்பது இம் மாவட்டத்தில் வாழும் அனைத்து தமிழ்



மக்களதும் கனவாகும். அதை நனவாக்க நானும் நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

அதேபோல பெருந்தோட்ட சமூகத்தின் சுகாதாரம் மற்றும் தொழில் வாய்ப்பும் அபிவிருத்தியடைய பெருந்தோட்ட பகுதியிலுள்ள தோட்ட வைத்தியசாலைகள் தரம் உயர்த்தப்பட வேண்டும்.

அத்துடன் தரம் உயர்த்தப்படும் வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று பிரதேச வைத்தியசாலைகளாக மாற்றி சிறந்த வைத்தியர்களை நியமித்து சிறந்த மருத்துவ வசதிகளை பெருந்தோட்ட மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

அதேபோல பெருந்தோட்ட பகுதியிலுள்ள மகளிர் மற்றும் குழந்தைகளைப் பாதுகாத்து அவர்களுக்கு தேவையான ஊட்டச் சத்து தேவைக்கு சிறந்த தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மேலும் முதியோர்களுக்கான முதியோர் இல்லங்களை நுவரெலியா மாவட்டத்தில் அமைக்கப்படட வேண்டும் என்பதும் எனது நோக்கமாகும்.

அதேபோல் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் எத்தனையோ படித்த இளைஞர், யுவதிகள் படித்து விட்டு வேலை இல்லாமல் அவதிப்படுகின்றனர்.

இவ்வாறு படித்த இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்பது எனது முக்கிய இலக்காகும்.

அவர்களுக்கு எனது ”மலரும் மலையகம்” மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பு பெற்று கொடுக்க என்னால் முடியும்.

இந்த நிலையில் படித்துவிட்டு தொழில் இல்லாமல் இருக்கும் இளைஞர் யுவதிகள் என்னுடன் தொடர்பு கொண்டால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுக்க முடியும்.

நான் கடந்த பல வருடங்களாக என்னுடன் தொடர்பு கொண்ட பல இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகள் பெற்றுக் கொடுத்துள்ளேன்.

அதேநேரத்தில் நான் அரசியலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எனது “மலரும் மலையகம்” மூலம் சமூக பணிகளை மேற்கொண்டு வருகின்றேன்.

இந்த நிலையில் எதிர்காலத்தில் எனது சேவைகளை மென்மேலும் எமது மக்களுக்கு செய்வதற்கு பலமான அரசியல் அந்தஸ்த்து ஒரு தேவைப்பாடாக இருக்கின்றது.

இந்த நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றம் செல்ல ஐக்கிய தேசிய கட்சியின் ஊடாக மக்களின் விருப்பத்துக்கு அமைய ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்த வாய்ப்பு நுவரெலியா மாவட்டத்தின் பெருந்தோட்ட மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களுக்கும் அரசில் சக்தியுடன் மக்கள் தேவை உணர்ந்து சேவை செய்ய ஒரு வரப்பிரசாதமாகும்.

எனவே நடைபெறவுள்ள தேர்தலில் நுவரெலியா மாவட்ட மக்கள் யானை சின்னத்ததுக்கு எனது வெற்றி இலக்கமான இலக்கம் 9 இற்கும் வாக்களித்து எனது வெற்றியை உறுதி செய்ய வேண்டுகிறேன்.– என்றார்.



# நுவரெலியா மாவட்டத்தில் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கு சதி!

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

மலையக மக்களின் சிறுபான்மை நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்குத் திட்டமிட்ட வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது. இதனை மக்கள் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களைத் தவிர்ந்த மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரமே 5 முதல் 6 சிறுபான்மை உறுப்பினர்கள் தெரிவு செய்ய வாய்ப்பு இருக்கின்றது.

கண்டி, பதுளை, இரத்தினபுரி, கேகாலை போன்ற பகுதிகளில் மலையக தமிழர்கள் வாழ்ந்து வந்தாலும் அங்கே எமக்கான பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்வதில் போட்டி நிலவி வருகின்றது.

அதனைச் சாத்தியப்படுத்துவதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி வியூகம் வகுத்து இந்த தேர்தலில் செயல்பட்டு வருகின்றது.

ஆனால் நுவரெலியா மாவட்டத்தில் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு பல்வேறு சதி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

குறிப்பாக பல கோடிகளை இந்த தேர்தலுக்காக கொட்டி கொடுத்து எங்களுடைய சிறுபான்மை மக்களை விலைக்கு வாங்கி சுயேட்சையாகவும், பல சின்னங்களிலும் போட்டியிட வைத்துச் சிறுபான்மை வாக்குகளை சிதறடிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கு எங்களுடைய சமூகத்தில் கல்வி கற்ற சிலரும் துணை போவது மனதுக்கு வேதனையளிக்கின்றது. கடந்த காலங்களில் இரத்தினபுரி, கண்டி பகுதிகளில் சிறுபான்மை மக்கள் பாதிக்கப்பட்ட பொழுது அவர்களுக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பதற்கு யாரும் இருக்கவில்லை. நாம் அவர்களுக்காகக் குரல் கொடுத்தோம்.

அது ஆளுங் கட்சியாக இருந்தாலும் சரி எதிர்கட்சியாக இருந்தாலும் சரி எமது சமூகத்துக்கான பிரச்சினையாக அதனை நாம் உணர்ந்தோம்.

ஆனால், இன்று நுவரெலியா மாவட்ட பிரதிநிதித்துவத்துக்கும் அந்த நிலையை உருவாக்க ஒரு சிலர் சிறுபான்மை கட்சிகளும், தனவந்தர்களும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

எனவே, நுவரெலியா மாவட்ட மக்கள் சிந்தித்துக் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்களை மனதில் கொண்டு உரியவர்களை தெரிவு செய்ய வேண்டும்.

வெறுமனே, தேர்தல் காலங்களில் வந்து செல்பவர்களையும், தங்களுக்கு யார் என்று தெரியாதவர்களுக்கும் வாக்களித்து விட்டு பின்பு பிரச்சினைகள் ஏற்படுகின்ற பொழுது யாரிடம் சென்று முறையிடுவது என்று தெரியாமல் குழம்புகின்ற ஒரு நிலைமை ஏற்படும்.

எனவே சிந்தித்து வாக்களித்து சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை பாதுகாத்துக் கொள்ள முன்வர வேண்டும்.– என்றார்.





# உலக உணவு தினத்தன்று ஹட்டனில் தெளிவூட்டல்!

(மஸ்கெலியா)

உலக உணவு தினமான நேற்று முன்தினம் கண்டி செட்டிக் நிறுவனம் ஹட்டன் நகரில் தெளிவூட்டும் நிகழ்வு ஒன்றை நடத்தியது.

நிகழ்வு செட்டிக் நிறுவன தலைவர் கண்டி மறை மாவட்ட ஆயர் மில்ரொய் பொன்சேகா தலைமையில் ஹட்டன் சென் பொஸ்கோ கிறித்தவ தேவாலய கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.

உணவு வேலை திட்ட வழிபாட்டுடன் பாடசாலை மாணவர்களின் கட்டிய,பரத, நாட்டியம் இடம் பெற்றது.

தொடர்ந்து நாட்டின் மக்கள் தேவைக்கு நச்சு தன்மை இல்லாத உணவுகள் எவ்வாறு பெற்று கொள்வது பற்றி செட்டிக் நிறுவன அதிகாரி திருமதி நிலானி திரேசா உரையாற்றினார்.

தொடர்ந்து செட்டிக் நிறுவன தலைவர் கண்டி மறை மாவட்ட ஆயர்




மில்ரொய் பொன்சேகா பேசுகையில்,

எமது செட்டிக் நிறுவனம் இலங்கையில் சகல மாவட்டங்களிலும் பணியாற்றி வருகிறது. இந்த நாட்டில் வாழும் 2 கோடிக்கும் மேலான மக்கள் அன்றாடம் மூன்று வேளை உணவில் நச்சு தன்மை கொண்ட உணவையே உட்கொள்கின்றனர்.

நமது நாட்டு மக்கள் தமக்கென ஒரு வீட்டு தோட்டத்தை அமைத்து கொண்டால் சேதன பசளையை பயன் படுத்தி நச்சு தன்மை இல்லாத மரக்கறி வகைகள் பழங்கள் போன்ற வற்றை பெற்று கொள்ள முடியும்.

இதனால் மாதாந்தம் பண சேமிப்பையும் ஏற்படுத்தி கொள்ள முடியும். காணி வசதி இருக்கும் பட்சத்தில் கோழி, ஆடு, மாடு போன்ற வீட்டு பண்ணைகளை ஏற்படுத்தி கொண்டால் இயற்கையான முறையில் சேதன பசளையை பெற்று கொள்ள முடியும்.

அத்துடன் முட்டை, இறைச்சி, பால் போன்ற ஊட்டச்சத்து மிக்க உணவுகளையும் உட்கொள்ள முடியும்.

எமது செட்டிக் நிறுவனம் இந்த வேலை திட்டத்துக்கான வழி காட்டல்களை மேற்கொண்டு வருகிறது.

நுவரெலியா மாவட்டத்திலும், கண்டி மாவட்டத்திலும், மாத்தளை மாவட்டத்திலும் எமது செட்டிக் நிறுவனம் கடந்த ஆறு ஆண்டுகளாக பணியில் ஈடுபட்டு வருகிறது.– என்றார்.




# இலங்கை சமூக பாதுகாப்புச் சபை மட்டக்களப்பில் பயிற்சிப் பாசறை!

(பழுவூரான்)

மட்டக்களப்பில் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் கிழக்கு மாகாணத்துக்காகப் பயிற்சிப் பாசறை மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) திருமதி நவருபரஞ்சினி முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் மாவட்டப் இணைப்பதிகாரி ஏ.எம். அமீனின் ஏற்பாட்டில் வடக்குக் கிழக்கு மாகாண சிரேஸ்ட இணைப்பு அதிகாரி பி. பிரதீபனின் பங்குபற்றுதலுடன் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை (16) இடம்பெற்றது.

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வுதியத் திட்டத்தினை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான நுட்பங்கள் மற்றும் உபாய நெறிமுறைகள் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு இதன் போது விளக்கமளிக்கப்பட்டது.

அரச ஓய்வூதியம் பெறாதவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்களை வழங்குவதே இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பணியாகக் காணப்படுகின்றது.

அரசால் மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும் தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்கள் இதன்போது துறைசார் நிபுணர்களால் வழங்கப்பட்டது.

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையானது 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கத் திருத்தச் சட்டம் மற்றும் 1999 ஆம் ஆண்டு இல 33 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.





# கரவெட்டி விக்கினேஸ்வராவின் பரிசளிப்பு தினம் சனிக்கிழமை!

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு தினம் நாளை (19) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் பி .அரவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மூளை நரம்பியல் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். பி. ஆதித்தன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராகப் பருத்தித்துறை நகரசபை அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. சேந்தன் கலந்து கொள்வார்.

நிறுவுனர் தின உரையை யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்துவார்.

பரிசில்களை கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீட இரசாயனவியல் பேராசிரியர் திருமதி லோகினி ஆதித்தன் வழங்குவார்.





### ஈழத்தில் தொடரும் சிங்கள பௌத்த மயமாக்கல்:

# அநுரவின் புதிய அரசின் அணுகுமுறை என்ன?

**- நவீனன்**

இலங்கையின்புதிய ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்க பதவியேற்ற போது தனது முதலாவது உரையில் தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து ஒரு வார்த்தையைக் கூட அவர் குறிப்பிடவில்லை. அவரது நிலைப்பாடு இவ்வாறுதான் இருக்கும் என்று தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

**இன மோதலும்
பௌத்த மயமாக்கலும்**

இலங்கையில் இன மோதலுக்கு வழிவகுத்த முக்கிய காரணிகளில் பௌத்த மயமாக்கலும் அடிப்படையாக அமைகின்றது. இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என பொய்யான பரப்புரைகளை சிங்களவர்கள் மத்தியில் இன்னமும் விதைத்த வண்ணம் உள்ளனர்.

வரலாற்றை முன்னோக்கி பார்த்தால் இலங்கையில் சிங்கள பௌத்த மதம் பின்பற்ற தொடங்கும் வேளையில் சிங்கள மொழியே இருக்கவில்லை. பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு பல ஆண்டுகளுக்கு பின்பே சிங்கள மொழி இலங்கையில் தோற்றம் பெற்றது என்பதே உண்மையாகும்.

போர் மௌனித்த பின்னர், இன்றுவரை இன அழிப்புக்கு பரிகார நீதியும் கிடைக்கவில்லை. இன அழிப்புச் செயற்பாடுகள் நிறுத்தப்படவுமில்லை. மாறாக, தாயக மண்ணில் தமிழர் மரபுரிமைச் சின்னங்கள் இருந்த இடங்கள் தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு அவ்விடங்கள் வேகமாக சிங்கள பௌத்த மயமாக்கப்படுகின்றன.

இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரவின் அரசியல் நிலைப்பாடுகள் குறிப்பாக அவரின் கடந்த கால அணுகுமுறைகள் பற்றித் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டியுள்ளது. இதுவரை காலமும் சிங்கள தலைமைகள் புத்த மேலாதிக்க மனோ நிலையோடு அதிகாரத்ததுக்கு வந்துள்ளன.

**கிழக்கைத் துண்டாடும் திட்டம்**

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவில் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு 26 இற்கும் அதிகமான விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சில பாரம்பரிய தமிழ்க் கிராமங்களை சிங்கள மாவட்டங்களுடன் இணைத்து வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றில் பல நீதிமன்றத் தீர்ப்புகளை மீறுபவை. இனஅழிப்பு நடவடிக்கைகளால் அதிகம் விழுங்கப்பட்ட ஒரு மாவட்டம் திருகோணமலை ஆகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருபுறம் சிங்கள பௌத்த மயமாக்கல் நடந்து வருகிறது. இன்னொரு புறம் நிலப்பறிப்பு தொடர்கிறது. உதாரணமாக 3000 குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான கால்நடை சார்ந்த பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கத்தோடு மயிலத்தமடு, மாதவனை போன்ற இடங்களில் மேய்ச்சல் தரைகளை அரச அனுசரணையோடும் பாதுகாப்போடும் சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்து வருகிறார்கள். இங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகள் மீறப்படுகின்றன.

அதேவேளை, வாகரை, கதிரவெளியில் கனிமவள அகழ்வு மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படுகின்றது. வாகரையில் இறால் பண்ணைகள் மக்களுடைய எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படுகின்றன. இவ்விரண்டு விடயங்களும் மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதிப்பவை. சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு எதிரானவையும் கூடவே.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவை முழுமையான ஒரு பிரதேச செயலர் பிரிவாகத் தரம் உயர்த்துமாறு தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். இன்றுவரை ஆட்சிக்கு வந்த எந்த ஓர் அரசும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. இன அழிப்பு நடவடிக்கைகளால் அதிகம் விழுங்கப்பட்ட மற்றொரு மாவட்டம் இதுவாகும்.

**வரலாற்றைத் திரிபுபடுத்த முயற்சி**

தமிழ் மன்னன் இராவணனையே சிங்கள அரசனாக சித்தரிக்கத் தற்போது முயல்கின்றனர். அதற்குப் பலமாக இராவண பலய என்ற பௌத்த பிக்கு அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன்மூலம் அந்த பொய்யை உண்மையாக்க முயல்கின்றனர்.

உண்மையில் வரலாற்றை நோக்கும் போது இற்றைக்கு 7000 ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்ததற்கு அடையாளங்கள் இருக்கின்றன. ஆனால் பௌத்தம் இலங்கையில் தோன்றி கிட்டத்தட்ட 2500 ஆண்டுகள் மட்டும் தான்.

ஆனால் பௌத்த பேரினவாதம் இதை மாற்றி தற்போது வரலாற்றைத் திரிபு படுத்த முயல்கின்றது. தற்போது தொல்லியல் பிரதேசங்கள் என்று வடக்கு கிழக்கில் உள்ள புனிதமான இடங்களைத் தொல்லியல் வரலாற்று அடையாளங்கள் எனக் கூறி பௌத்த மயமாக்கலுளுக்கு உட்படுத்துகின்றனர்.

**வடக்கில் தமிழ்மண் ஆக்கிரமிப்பு**

வடக்கில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் குருந்தூர் மலை, வெடுக்கு நாறிமலை, நீராவியடி ஆகிய இடங்களில் தமிழ் மரபுரிமைச் சின்னங்கள் அமைந்திருக்கும் சிறுமலைகளில் அரச திணைக்களங்களும் பிக்குகளும் அரச படையினரும் பௌத்த கட்டுமானங்களை உருவாக்கி வருகிறார்கள்.

அங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகள் மீறப்படுகின்றன.

தொடர்ச்சி▼

# அநுரவின் புதிய அரசின் அணுகுமுறை என்ன?

தொடர்ச்சி▲

இக்கட்டளைகளை வழங்கிய ஒரு நீதிபதி நாட்டைவிட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அதற்காக வெட்கப்படவேண்டிய அரசாங்கம் அவரைத் தனிப்பட்ட முறையில் சிறுமைப்படுத்தியது.

முல்லைத்தீவில் உள்ள கொக்குத்தொடுவாயில் மேற்கொள்ளப்படும் மனிதப் புதைகுழி அகழ்வானது பன்னாட்டு நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ் இடம் பெறவில்லை.

யுத்தம் முடிவடைந்த பின்னர் முல்லைத்தீவில் மட்டும் 67 பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் பொது மக்கள் மற்றும் இராணுவம் இடையிலான விகிதம் 2:1 ஆக இன்னமும் இருக்கின்றது. சுமார் 100 இற்கும் மேற்பட்ட படை முகாம்கள் முல்லைத் தீவு மாவட்டத்தில் மட்டும் அமைக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் கொக்கச்சான் குளம் என்ற தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் குடியிருப்பு இராணுவப் பாதுகாப்புடனும் அரச அனுசரணையுடனும் ஆக்கிரமிக்கப்பட்டு 'கலாபோபஸ்வேவ' என்ற பெயருடைய சிங்களக் கிராமமாக மாற்றப்பட்டு மிகக்குறுகிய காலத்துக்குள் அந்த கிராமத்துக்குத் தேவையான சகல உட்கட்டுமான வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

இதேபோன்று, அம்பாந்தோட்டையிலிருந்து கொண்டு வரப்பட்டவர்களை அரசின் அனுசரணையோடு குடியமர்த்தி 'நாமல்கம' என்ற ஒரு கிராமம் உருவாக் கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில், கனிம வளம் பறிக்கப்ப டுகின்றது. அங்குள்ள முள்ளிக் குளம் கிராமத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கும் இலங்கைக் கடற்ப டையானது அக்கிராமத்தின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்களை அங்கு முழுமையாக மீளக் குடியமர விடாமல் தடுத்து வருகின்றது.

### சிங்கள பௌத்த பேரினவாதம்

வரலாற்றை முன்னோக்கி பார்த்தால் இலங்கையில் சிங்கள பௌத்த மதம் பின்பற்ற தொடங்கும் வேளையில் சிங்கள மொழியே இருக்கவில்லை. பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு பல ஆண்டுகளுக்கு பின்பே சிங்கள மொழி தோற்றம் பெற்றது.

வரலாற்றை நோக்கில் புத்தரை முதன்முதலில் வழிபட்டவர்கள் தமிழரே. அதன் பின்பே பாளி மொழியில் இருந்து திரிபுபட்டு சிங்கள மொழி உருவானது யாவரும் அறிந்ததே. இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டிலும் சிங்கள மொழி பயன்பாட்டில் இல்லாததால் இலங் கையைச் சிங்கள மொழியின் தாயகமாக்க சிங்கள பௌத்த பேரினவாதம் முயல்கின்றது.

ஆரம்ப காலங்களில் தமிழர்கள் புத்தரின் போதனைகளை பின்பற்றத் தொடங்கினர். இந்த அடிப்படையில் நோக்கும் போது வெறுமனே இலங்கையைச் சிங்கள பௌத்த நாடாக்க முயல்வது வேடிக்கையானது.

### மன்னார் புதைகுழி உண்மை வெளிவரவில்லை

மன்னார் புதைகுழி தொடர்பான உண்மைகள் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழர் மரபுரிமைச் சொத்துகளை தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்து வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் படைத்தரப்பு முகாம்களை அமைத்திருக்கும் பெரும்பாலான காணிகள் தனி யாருக்குரியவை. இவற்றுள் மிகச்சிறிய நிலப்பரப்புத்தான் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்திலும்



தமிழர் மரபுரிமைச் சொத்துக்கள் பல ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள பௌத்த மயமாக்கப்பட்டுள்ளன.

நாவற்குழியில் அரசின் அனுசரணையோடு ஒரு சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தையிட்டியில் தனியார் காணியில் சட்டவிரோதமாக ஒரு புதிய விகாரை படையினரால் கட்டப்பட்டுவிட்டது.

### தமிழர் தாயகம் படையினரால் அபகரிப்பு

தமிழர் தாயகம் எங்கும் தனியார் காணிகள் படையி னரால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே அபகரிக்கப்பட்ட தனியார் காணிகள் பல இதுவரை விடுவிக்கப்படவில்லை. ஆனால் பெரும்பகுதி விடுவிக் கப்பட்டு விட்டதாக அரச புள்ளி விவரங்கள் பொய் கூறுகின்றன.

தமிழர் தாயகமெங்கும் வனவளத் திணைக்களமும், வனஜீவராசிகள் திணைக்களமும் காடுகளின் பாதுகாப்பு, வன உயிரினங்களின் பாதுகாப்பு என்ற பெயரில் தனியார் காணிகள், பயிர்ச்செய்கை நிலங்கள், வணக்கத்தலங்கள்உள்ளடங்கியபல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவு நிலத்தை அபகரித்து வைத்திருக் கின்றன. மேற்குறிப்பிடப்பட்டவை சில உதாரணங்கள் மட்டுமே. கடந்த 15 ஆண்டுகளாக நிலப் பறிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் அரசுக் கொள்கையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### புதிய அநுர அரசின் நடவடிக்கை என்ன?

நீண்ட பல ஆண்டுகளாக நிலப்பறிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் தமிழர் பகுதிகளில் தொடர்கிறது. தற்போதய புதிய அனுரவின் அரசு எந்தவித நடவடிக் கைகளையும் எடுப்பதாக தெரியவில்லை.

ஆயினும் தமிழ் பேசும் மக்கள் புதிய அரசின் அப்பட்டமான நம்பிக்கையை வளர்த்து வருகின்றனர்.

முன்பும் 1994 சந்திரிக்கா அம்மையார் அவர்கள் இலங்கையின் ஜனாதிபதியாக அரியணை ஏறியபோதும் போதும் அவர் ஒரு பெண் தானே தமிழ் மக்களின் உணர்வுகளை அவர் தாயன்போடு புரிந்துகொள்ளவார் என்று நம்பினர்.

தமிழ் மக்கள் தூற்றும் அளவுக்குச் சந்திரிக்கா அம்மணி செம்மணியில் கிரிஷாந்தி உள்ளிட்ட பலநூறு தமிழர்களை துடிக்கத் துடிக்கக் கொன்று புதைத்து , பல லட்சம் தமிழர்களையும் இடம்பெயரச் செய்த வரலாறை தமிழர்கள் மறக்க முடியாது.

தற்போது அநுரவும் சிங்கள, புத்த மேலாதிக்க மனோ நிலையோடு அதிகாரத்துக்கு வந்துள்ளார் என்பது தெளிவாக புலப்படுகிறது. இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரவின் அரசியல் நிலைப்பாடுகள் குறிப்பாக அவரின் ஜே.வி.பியின் கடந்த கால தமிழ் விரோத அணுகுமுறைகள் பற்றி தமிழ் மக்கள் நீண்டகாலமாக அறிந்துள்ளார்கள்.



# பெருங்கற்கால குடியிருப்பு மையங்களில் ஒன்றான கந்தரோடை...!

● தங்கராசா விதுஷன்

அனுராதபுரத்தை அடுத்து இலங்கையில்இன்னொரு முக்கிய பெருங்கற்கால குடியிருப்பு மையமாக இலங்கையில் யாழ்ப்பாணத்தில் உள்ள கந்தரோடை காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் வடமேற்குப் பகுதி சுன்னாகம் வட்டாரத்தில் கடற்கரையிலிருந்து மேற்கே ஆறு மைல் தூரத்தில் கந்தரோடை காணப்படுகிறது. கடல் மட்டத்தி லிருந்து 28 தொடக்கம் 30 அடி உயரத்தில் அமைந்த இவ்விடம் 3.2 சதுர கிலோ மீற்றர் பரப்புடையது.

இதில் குறிப்பாக இரண்டு கிலோ மீற்றர் அளவில் புராதன குடியிருப்புகளுக்கு உரிய தொல்லியல் சின்னங்கள் காணப்படுகின்றன என்று ஆய்வுகளின்படி அறிய முடிகின்றது. யாழ்ப்பாணத்தில் இரண்டாவது பெரும் குளங்களைக் கொண்ட இவ்விடத்தின் ஊடாக பாடும் வழுக்கையாறு மழை காலத்தில் கந்தரோடையை கடலுடன் தொடர்புபடுத்துகிறது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரேயொரு நன்னீர் ஆறு என்ற பெருமைக்குரி உயதாக வழுக்கை யாறு காணப்படுகின்றது. கந்தரோடையின் வரலாற்றுப் பழமை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து அறியப்படுகின்றது.

1917-19 காலப்பகுதியில் போல்பீரிஸ் கந்தரோடைப் பகுதியில் மேற்கொண்ட கள ஆய்வு மற்றும் சிறிய அளவிலான அகழ்வாய்வுகளும் இவ்விடத்தினுடைய வரலாற்றுத் தொன்மையை வெளிப்படுத்திய முதல் ஆய்வாக காணப்படுகின்றது. போல்பீரிஸ் இவ் ஆய்வுகளின் போது அதிக எண்ணிக்கையில் கிடைத்த சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு அனுராத புரத்தை அடுத்து இலங்கையில் தோன்றிய புராதன நகரமாக கந்தரோடையைக் குறிப்பிடுகின்றார்.

போல்பீரிசைத் தொடர்ந்து கி.பி. 1960 ஆம் ஆண்டும் இலங்கை தொல்லியல் திணைக்களம் இங்கு சிறிய அளவில் தொல்லியல் அகழ்வாய்வை மேற்கொண்டது. இந்த ஆய்வின் முக்கிய நோக்கம் புதையுண்டிருந்த பௌத்த கட்டடங்களை வெளிக்கொண்டு வந்து அதை மீள கட்டியமைப்பதாகும். இருப்பினும் 1970 பென்சில் வேனிய பல்கலைக்கழக அரும்பொருளக ஆய்வாளர்கள் மேற்கொண்ட அகழ்வாய்வுதான் முன்னைய ஆய்வுகளைவிட பல வகைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

இந்த ஆய்வு தொடர்பான அறிக்கை இன்னும் வெளிவராத நிலையில் ஆய்வுக்குப் பொறுப்பாக இருந்த விமலாபேக்கிலே எழுதிய கட்டுரை ஒன்றிலிருந்து இதன் முக்கியத்துவத்தை ஓரளவுக்கு அறிய முடிகின்றது. இந்த ஆய்வின் போது தற்போது பௌத்த தூபிகள் காணப்படும் இடங்களுக்கு அருகில் நான்கு மீற்றர் ஆழத்தில் இரு ஆய்வுக்குழிகள் அமைக்கப்பட்டு அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் பெருங்கற்கால பண்பாட்டுக்கு உரிய வரலாற்று உதயகால படையும், அதனைத் தொடர்ந்து வரலாற்று தொடக்ககால படையும் அடையாளம் காணப்பட்டன.

பொம்பரிப்பு, அனுராதபுரம் ஆகிய இடங்களில் இடைக்கால பண்பாட்டை அடுத்து பெருங்கற்கால பண்பாடும் அதை அடுத்து வரலாற்று தொடக்க கால பண்பாடும் காணப்பட்டது. ஆனால் கந்தரோடையில் இடைக்கால பண்பாட்டுக்கு உரிய சான்றுகள் காணப படாது, பெருங்கற்கால பண்பாடும் அதை அடுத்து வரலாற்றுத் தொடக்க கால பண்பாடும் காணப்பட்டன. இதிலிருந்து யாழ்ப்பாணத்தின் ஆரம்ப கால குடியிருப்பு பெருங்கற்கால பண்பாட்டுடன் தொடங்கியதை அறிய முடிகின்றது.

இந்த அகழ்வின்போது வரலாற்று உதயகால கலாச்சாரப்படைக்கு மேற்படையில் வரலாற்று தொடக்க கால சின்னங்கள் காணப்பட்டன. அதில் மூன்றாவது கலாச்சாரப் படையில் கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்கள், ரோம மட்பாண்டங்கள், பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடு, நாணயங்கள் என்பனவும் நான்காவது கலாச்சார படையில் பௌத்த மத எச்சங்களும் காணப்பட்டன.

எனவே வெவ்வேறுபட்ட கலாச்சாரப் படைகளுக்கு இடையிலான தொடர்புகளை நோக்கும் போது வரலாற்று உதயகால மக்களே வரலாற்றுக் கால பண்பாட்டையும் வளர்த்தெடுத்தனர் என்பது தெளிவாகிறது. இங்கு கிடைத்த பெருங்கற்கால பண்பாட்டுக்கு உரிய மண் பாண்டங்களில் குவளைகள், வட்டில்கள், பானைகள் என்பன வடிவமைப்பில் அனுராதபுரம் பொம்பரிப்பு ஆகிய இடங்களில் கிடைத்த மட்பாண்டங்களை பெரிதும் ஒத்தவையாக காணப்பட்டன. இந்த ஒற்றுமைகள் கந்தரோடையில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களும் தென்னிந்திய திராவிட மக்களும் ஒரே இனத்தவராக அல்லது நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருந்தனர் என்பதைக் காட்டுவதாக அமைகின்றது.

அதேபோன்று கந்தரோடை கொம்பரிப்பு பெருங்கற் கால மண்பாண்டகளுக்கு இடையே காணப்படும் நெருங்கிய ஒற்றுமைகளை சுட்டிக்காட்டி இம்மக்களின்

தொடர்ச்சி▼

# பெருங்கற்கால குடியிருப்பு மையங்களில் ஒன்றான கந்தரோடை...!

தொடர்ச்சி▲

குடியிருப்புகள் கொம்பரிப்பு தொட்டு கந்தரோடைவரை இலங்கையின் கரையோர பிரதேசங்களில் தொடர்ச்சியாக இருந்திருக்கலாம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. அதேபோல பேராசிரியர் புஷ்பரட்ணம் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வின் போது பெறப்பட்ட கருப்பு, சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள், கல்மணிகள், இரும்புக் கருவிகள் என்பவற்றை பார்க்கின்ற போது கந்தரோடை பிரதேசமானது பெருங்கற்கால பண்பாட்டுக்கு உரியதென அறியக் கூடியதாக உள்ளது.

கந்தரோடையில் பெருங்கற்கால குடியிருப்பு பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகள் விஞ்ஞான பூர்வமான காலக்கணிப்புக்கு உட்படுத்தப்படாத நிலையில் இப்பண்பாட்டின் தோற்றம் காலம் கி.மு. நான்காம் நூற்றாண்டு காலப் பகுதிக்கும் கி.மு. முதலாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலமாக இருக்கலாமென நோக்கப்படுகின்றது. ஆனால் அண்மை காலத்தில் அச்சான்றுகள் காபன் காலக் கணிப்புக்கு உட்படுத்தப்பட்ட போது அவற்றுள் பல சான்றுகள் இந்தப் பண்பாட்டின் தோற்ற காலத்தைக் கி.மு. 5000 இலிருந்து கி.மு. 100 வரை எடுத்துக்காட்டிய போது, இரு சான்றுகள் அவற்றின் தோற்ற காலத்தை கி.மு. 1000 என கணித்துள்ளது.

இக்காலக் கணிப்பு பொருத்தமாக இருப்பின் இலங்கையின் முதலாவது பெருங்கற்கால குடியிருப்பு நிகழ்ந்த இடங்களில் ஒன்றாகக் கந்தருடையையும் எடுத்துக்கொள்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

இலங்கையில் அனுராதபுரத்தை அடுத்து முக்கிய பெருங்கட்கால குடியிருப்பு மையங்களில் ஒன்றாக கந்தரோடை காணப்பட்டாலும் அனுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்டதைப் போன்று விரிவான அகழ்வாய்வுகள் இங்கு மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற குளநீர்ப்பாசன விவசாயம் மந்தை வளர்ப்பு மற்றும் பெருங் கற்கால மட்பாண்டங்களுடன் மங்கிய நிலையில் காணப்பட்ட மண்பாண்ட குறியீடுகள், பிராமி எழுத்து பொறித்த மட்பாண்டங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள், கல்மணிகள், ரோம மட்பாண்டங்கள் என்பவற்றைப் பார்க்கின்ற போது அனுராதபுரம் மகாகமை போன்று கந்தரோடையிலும் பெருங் கற்கால பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் நகரமயமாக்கமும் அரச உருவாக்கமும் நிகழ்ந்தது என கருதலாம்.

எனவே கந்தரோடைப் பிரதேசம் பெருங் கற்காலப் பண்பாட்டினையும் ஆரம்பகாலத்தில் இருந்தே தமிழர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளையும் வரலாற்றுத் தொண்மையையும் எடுத்துக் காட்டுவதற்கான முக்கிய மையங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.





# கட்சியிலிருந்து எவர் வெளியேறிச் சென்றாலும் திறமையானோரை அடையாளப்படுத்துவோம்!

## கிண்ணியாவில் ரிஷாத் தெரிவிப்பு

திருகோணமலை மாவட்டத்தில், நான்கு வருடங்களாக தீர்க்கப்படாதுள்ள பிரச்சிச்சினைகளுக்கு தீர்வுகாணும் களப்பணிகளைச் சிறப்புடன் செய்யும் வேட்பாளர் டாக்டர் ஹில்மி மஹ்ரூப். எனவே, இந்த முறை தேர்தலில் அமோக ஆதரவுடன் அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், ஐக்கிய மக்கள் கூட்டணியில், திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் டாக்டர் ஹில்மி மஹ்ரூபை ஆதரித்து, செவ்வாய்க்கிழமை (15) கிண்ணியாவில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு நாங்கள் தீர்மானித்தோம். அந்தத் தேர்தலில் சுமார் 95 ஆயிரம் வாக்குகளைச் சஜித்துக்குப் பெற்றுக்கொடுத்தோம். ஆனால், எமது தீர்மானத்துக்கு உடன்பட முடியாது எனக் கூறிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப், அமைதியாக இருக்கப் போகிறார் என்று தெரிவித்தார். பின்னர், ரணிலின் தந்திரத்துக்குப் பலியாகி எமது கட்சியிலிருந்து தூரமாகிவிட்டார்.

அப்துல்லாஹ் மஹ்ரூப் கட்சியின் வளர்ச்சிக்காக கடந்த காலங்களில் செய்த பணிகளுக்கு நன்றி கூறுகிறோம். 2010 மற்றும் 2015 தேர்தல்களில், அவரை வேட்பாளராக நிறுத்தி வெல்ல வைத்ததும் எமது கட்சியே. இதற்காக இம்மாவட்டத்தைச் சேர்ந்த பலர் உழைத்தனர். இப்போது அப்துல்லாஹ் மஹ்ரூப் எங்களுடன் இல்லை. எவர் வெளியேறினாலும் பறவாயில்லை. திறமையானவர்களை களத்துக்கு கொண்டு வந்து, கட்சியை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்வதே எமது இலக்காக இருக்கும்.

அந்தவகையில், டாக்டர் ஹில்மி மஹ்ரூபை நாடாளுமன்றத் தேர்தலில் நிறுத்தியுள்ளோம். நகர சபை தவிசாளராக இருந்த இவரிடம் நிறைய அனுபவங்கள் உள்ளன. சிறந்த கல்விமானாகவும் ஒழுக்க சீலராகவும் இவரை நாம் பார்க்கிறோம். அவரது வெற்றி உறுதியாகும்.

புல்மோட்டை முதல் தோப்பூர்வரை அவருக்கு ஆதரவு இருக்கிறது. இம் மாவட்டத்தின் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி உழைப்பதற்கு, டாக்டர் ஹில்மி மஹ்ரூபை வெற்றியடையச் செய்ய வேண்டும்.- என்றார்.

# கொல்கத்தா பயிற்சி மருத்துவர்களின் போராட்டம் 13 ஆவது நாளை எட்டியது




கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி. கர்அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் முதுநிலை பெண் பயிற்சி மருத்துவரின் படுகொலைக்கு நீதி கேட்டு காலவரையற்ற உண்ணா விரதத்தில் ஈடுபட்டுவரும் கொல்கத்தா பயிற்சி மருத்துவர்களின் போராட்டம் 13 ஆவது நாளை எட்டியது.

உயிரிழந்த மருத்துவருக்கு நீதி கிடைக்க வேண்டும், மாநில சுகாதார செயலாளரை மாற்ற வேண்டும், மருத்து வமனைகளில் மருத்துவர்களுக்கு போதிய வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 10 கோரிக்கைகளை வலி யுறுத்தி பயிற்சி மருத்துவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பயிற்சி மருத்துவர்களின் போராட் டத்துக்கு ஆதரவாக ஆர்.ஜி.கர் மருத்து வமனையின் 50 மூத்த மருத்துவர்கள் கடந்த 8 ஆம் திகதி இராஜினாமா செய்தனர். அவர்களும் கொல்கத்தா நகரின் மையப்பகுதியில் நடைபெற்று வரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்று வருகின்றனர்.

இந்த நிலையில், 6 பேரின் உடல் நலம் நேற்று கடுமையாக பாதிக் கப்பட்டதால் அவர்கள் மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்டனர்.

# லாரன்ஸ் பிஷ்னோயுடனான பகையை முடிக்க 5 கோடி ரூபா

## சல்மான் கானுக்கு புதிய மிரட்டல்

லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலுடனான நீண்ட கால பகையை முடிக்க சல்மான் கான் 5 கோடி ரூபா வழங்க வேண்டும் என்று ஒரு மிரட்டல் செய்தியை மும்பை போக்கு வரத்து காவல்துறைக்கு லாரன்ஸ் கும்பலைச் சேர்ந்த ஒருவர் அனுப்பியுள்ளார்.

பணத்தை சல்மான் கான் கொடுக்கத் தவறினால், அவரது நிலைமை சமீபத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட மகாராஷ்டிராவின் முன்னாள் அமைச்சர் பாபா சித்திக்கைவிட மிகவும் மோசமாக இருக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மிரட்டல் செய்தியில், “சல்மான் கான் நீண்ட நாள் கள் வாழ விரும்பினால், லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலுடனான பகையை முடித்துக்கொள்ள விரும்பினால் அவர் 5 கோடி ரூபா வழங்க வேண்டும். இதை அலட்சியம் செய்யவேண்டாம். அப்படிச் செய்தால், அவரின் நிலைமை பாபா சித்திக்கை விட மிகவும் மோசமாக இருக்கும்.” என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து மும்பை பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சல்மான் கானின் நெருங்கிய நண்பரும், தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் (அஜித் பவார் அணி) சேர்ந்தவருமான பாபா சித்திக் கடந்த 12 ஆம் திகதி பாந்திராவில் தனது மகன் ஷீசான் சித்திக்கின் அலுவலகத்துக்கு வெளியே சுட்டுக்கொல்லப்பட்டார். இது தொடர்பாக இதுவரை 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சதியில் முக்கியமானவராக கருதப்படும் சுபம் லோங்கர், பாபா சித்திக்கின் கொலைக்கு பின்னால் லாரன்ஸ் பிஷ்னோய் இருப்பதாக சமூக வலைதளத்தில் தெரிவித்திருந்தார்.

இதனிடையே, நடிகர் சல்மான் கானை கொலை செய்ய சர்வதேச கிரிமினலான லாரன்ஸ் பிஷ்னோய் குறிவைத் துள்ளார். இவரது கும்பலைச் சேர்ந்த சுமார் 70 பேர் சல்மான் கானை, 24 மணி நேரமும் கண்காணித்து வருகின்றனர் என மகாராஷ்டிரா பொலிஸ் கருதுகிறது.

கடந்த ஆகஸ்ட் 2023 முதல் 2024 ஏப்ரலுக்குள் சல்மான் கானை, தான் கொலை செய்யப்போவதாக, லாரன்ஸ் அறிவித்திருந்தார். இந்த கால அவகாசம் முடிந்ததால் மகராஷ்டிர பொலிஸார் சற்று பெருமூச்சு விட்டிருந்தனர்.



இந்நிலையில், கடந்த ஒக்டோபர் 12 ஆம் திகதி இரவு, மும்பையில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் பாபா சித்திக் சுட்டுக்கொல்லப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து நடிகர் சல்மான் கானுக்கான பாதுகாப்பை மகாராஷ்டிர அரசு மீண்டும் பலப்படுத்தி உள்ளது.

கடந்த 2018 இல் இராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தில், ஒரு வழக்கு விசாரணைக்காக ஆஜரான லாரன்ஸ் பிஷ்னோய், தான் சல்மானைக் கொல்ல இருப்பதாக முதன்முறையாக தெரிவித்திருந்தார். அப்போது முதல் சல்மான் கானுக்கு லாரன்ஸ் கும்பலால் ஆபத்து தொடர்ந்து வருகிறது.

எனினும், கடந்த ஏப்ரல் மாதம் கூட மும்பையில் உள்ள சல்மான் கான் வீட்டின் மீது இருவர் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பினர். அப்போது, மகாராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவும் சல்மான் கான் வீட்டுககு நேரில் சென்று, லாரன்ஸ் கும்பலை மண்ணோடு மண்ணாக்குவோம் எனக் கூறி நம்பிக்கை தெரிவித்திருந்தார். பின்னர், லாரன்ஸ் கும்பலால் பாபா சித்திக் கொல்லப்பட, சல்மான் கான் மீதான ஆபத்து அதிகரித்திருப்பதாக அஞ்சப்படுகிறது.

இந்தப் பின்னணியில்தான் சல்மான் கானை கொலை செய்ய சர்வதேச கிரிமினலான லாரன்ஸ் பிஷ்னோயின் கும்பலைச் சேர்ந்த சுமார் 70 பேர் 24 மணி நேரமும் அவரைக் கண்காணித்து வருவதாக மகாராஷ்டிரா பொலிஸ் கருதுவது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# ஹமாஸ் தலைவர் உயிரிழப்பு; இது வெறும் ஆரம்பம் மட்டுமே

## இஸ்ரேலிய பிரதமர் தெரிவிப்பு





ஹமாஸ் தலைவர் யாஹ்யா சின் வார் கொல்லப்பட்டது, ஹமாஸ் அமைப் பிற்கு வெறும் ஆரம்பம் மட்டுமே என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு தெரிவித்துள்ளார்.

யாஹ்யா சின்வார் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தீய சக்திகள் பலத்த அடியை சந்தித்துள்ள போதிலும், தங்க ளுக்கு முன்னால் உள்ள பணி இன்னும் முழுமையடையவில்லை என்றும் நெதன்யாகு கூறியுள்ளார்.

சின்வாரின் கொலையை போரில் ஒரு முக்கிய தருணம் என்று கூறிய நெதன்யாகு, காசாவில் வசிப்பவர்கள், இறுதியாக ஹமாஸின் கொடுங்கோன் மையிலிருந்து விடுபட இது ஒரு வாய்ப்பு என்றும் விவரித்துள்ளார்.

மேலும், அந்த அறிக்கையில் மீத மிருக்கும் ஹமாஸின் தலைவர்களும் ஒழித்துக் கட்ட படுவார்கள் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலியர்களை பணயக்கைதிகளாக வைத்திருப்ப வர்கள், ஆயுதங்களை தூக்கி எறிந்து விட்டு அவர்களை திருப்பி அனுப்ப அழைப்பு விடுத்ததோடு, அவ்வாறு செய்பவர்கள் வெளியே சென்று வாழ அனுமதிக்கப்படுவார்கள் என்றும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும், சின்வாரை கொலை செய்த வீரர்களை பாராட்டிய அவர், காசாவில் இன்னும் பணயக்கைதிகளாக இருப்பவர்களின் குடும்பத்தினரிடம்,'உங்கள் அன்புக்குரியவர்கள் அனைவரும் வீடு திரும்பும் வரை முழு பலத்துடன் இஸ்ரேல் பணியை தொடரும்' என வலியுறுத்தியுள்ளார்.

# ஜப்பானில் நில அதிர்வு!

ஜப்பானின் நோடா பகுதியில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 5.1மெக்னிடியூட்டாக பதிவாகியுள்ளது.

இந்த நில அதிர்வின் தாக்கம் ஜப்பானில் உள்ள இவாட்டே, அகிடா, அமோரி, ஹோகடோ மற்றும் மியாகி ஆகிய பகுதிகளில் உணரப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், நில அதிர்வினால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை எனவும் சில இடங்களில் மின்சாரம் துண்டிப்பு ஏற்பட்டுள்ளதுடன் சில கட்டடங்கள் சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டமைக்கு மகிழ்ச்சி வெளியிட்டனர் ஜோ பைடன்



ஹமாஸ் அமைப்பின் தலைவர் யாஹ்யா சின்வார் கொல்லப்பட்டார் என அறிவிக்கப்பட்டதை அடுத்து பல உலக நாடுகளின் தலைவர்கள் தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ள னர்.

அந்தவகையில் அமெரிக்க ஜனா திபதி ஜோ பைடன், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு தொலை பேசி ஊடாக வாழ்த்து தெரிவித்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித் துள்ளன.

யாஹ்யா சின்வாரின் மரணமானது, இஸ்ரேலியர்களுக்கு நிம்மதியான தருணத்தைக் குறிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் தமது இலக்குகளை அடைவதற்கு யாஹ்யா சின்வார் பாரிய தடையாகக் காணப்பட்டதாகவும், அந்தத் தடை தற்போது நீங்கியுள்ளதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் 02

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 18/10/2024

## கனடிய புலனாய்வு பிரிவிற்கு புதிய தலைவர் நியமனம்

கனடாவின் புலனாய்வு முகவர் நிறுவனத்திற்கு புதிய பனிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

02



# ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்தியாவுக்கு எதிராக ஆதாரம் இல்லை

## கனடா பிரதமர் ஒப்புதல்

**காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்தியாவுக்கு எதிராக ஆதாரம் இல்லை என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**

**இருந்த தகவலை இந்திய ஊட கங்கள் வெளியிட்டுள்ளன.**

கடந்த ஆண்டு ஜூன் மாதம் கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார்சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த கொலையில் இந்திய அரசுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டி வருகிறார். சுமார் ஓராண்டுக்கும் மேலாக மவுனமாக இருந்த அவர் தற்போது மீண்டும் அதே குற்றச் சாட்டை எழுப்பி வருகிறார்.

நிஜ்ஜார் கொலையில் கனடாவுக்கான இந்திய தூதர்சஞ்சய் குமார் வர்மாவுக்கு தொடர்புஇருப்பதாக பிரதமர் ஜஸ்டின் அண்மையில் குற்றம் சாட்டினார். இதைத் தொடர்ந்து சஞ்சய் குமார்வர்மா உட்பட 6 இந்திய தூதரக அதிகாரிகளை கனடா அரசு வெளியேற்றியது. இதற்கு பதிலடியாக இந்தியாவில் பணியாற்றிய 6 கனடா தூதரக அதிகாரிகளை மத்தியஅரசு வெளியேற்றியது.

கனடா அரசியலில் வெளிநாட்டு சக்திகளின் தலையீடுகள் தொடர்பான விவகாரங்களை அந்த நாட்டின் சிறப்பு குழு விசாரிக்கிறது. இந்த குழு, நிஜ்ஜார் கொலை வழக்குதொடர்பாக நேற்றுமுன்தினம் விசாரணை நடத்தியது. அப்போது கனடா பிரதமர் ஜஸ்டின் சிறப்புகுழுவின் முன்பு நேரில் ஆஜராகிவிளக்கம் அளித்தார்.

அப்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ஹர்தீப் சிங்நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்தியாவுக்கு எதிராக ஆதாரம் இல்லை.கனடா உளவுத் துறை தகவலின்அடிப்படையில் இந்த கொலைவழக்கு தொடர்பான விசாரணைக்குஇந்தியா ஒத்துழைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறேன். ஐந்து கண்கள் என்ற அமைப்பில் அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, கனடா ஆகியவை உறுப்பினர்களாக உள்ளன. நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக இந்த அமைப்பின் உளவா ளிகளும் உறுதிப்படுத்தி உள்ளனர்.” - என்றார்.

இதுதொடர்பாக மத்திய வெளியுறவுத் துறை வெளியிட்ட அறிக்கையில்,

“இந்தியா மற்றும் இந்திய தூதர்கள் மீதான குற்றச்சாட்டுகளுக்கு கனடா அரசு ஆதாரங்களை வழங்கவில்லை. கனடா பிரதமர் ஜஸ்டினின் பொறுப்பற்ற செயலால் இரு நாடுகள் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருக்கிறது” என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே கனடா பொலிஸ் அதிகாரிகள் சில நாள்களுக்கு முன்பு கூறும்போது,

“இந்தியாவை சேர்ந்தநிழல் உலக தாதா லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலின் உதவியுடன் இந்திய அரசு கனடாவில் பல்வேறுசமூகவிரோத செயல்களில் ஈடுபடுகிறது” என்று குற்றம் சாட்டினர். இதே குற்றச்சாட்டை கனடா பிரதமர் ஜஸ்டினும் முன்வைத்துள்ளார்.

இதுதொடர்பாக மத்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் டில்லியில் நேற்று முன்தினம் குறிப்பிடுகையில்,

“லாரன்ஸ் பிஷ்னோயின் கும்பலை சேர்ந்த பலர் கனடாவில் பதுங்கி உள்ளனர். குறிப்பாக குர்ஜித் சிங், குர்ஜிந்தர் சிங், அர்தீப் சிங்கில், லக்பீர் சிங் லண்டா, குர்பிரீத் சிங் ஆகியோர் கனடாவில் உள்ளனர்.அவர்களை கைது செய்து இந்தியாவுக்கு அனுப்பி வைக்குமாறு கனடா அரசிடம் கோரி உள்ளோம். ஆனால்கனடா அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்தியா தனது நிலைப்பாட்டை ஏற்கெனவே தெளிவுபடுத்தி உள்ளது. இந்த வழக்கு தொடர்பான உறுதியான ஆதாரங்களை கனடா அரசு வழங்க வேண்டும். ஆனால் இதுவரை எந்த ஆதாரத்தையும் கனடா வழங்கவில்லை.

இந்தியா மீதும் இந்திய தூதர்கள் மீதும் கனடா அரசு ஆதாரமற்ற குற்றச் சாட்டுகளை சுமத்துகிறது. இதன் பின்னணியில் அரசியல்

C2

# 34 ஆண்டு அரசியலுக்கு விடை கொடுக்கின்றார் ஒன்றாரியோ மாகாண சபாநாயகர் டெட் ஆர்னட்

கனடாவின் ஒன்றாரியோ மாகாண சபாநாயகர் 34 வருட அரசியல் வாழ்க் கைக்கு விடை கொடுக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் தாம் போட்டியிடப் போவ தில்லை என ஒன்றாரியோ மாகாண சபாநாயகர் டெட் ஆர்னட் தெரிவித்துள்ளார்.

கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் டெட் ஆர்னட் மாகாண சபை தேர்தல்க ளில் போட்டியிட்டு வருகின்றார்.

எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளார்.

மாகாண மக்களுக்கு சேவை யாற்றக் கிடைத்தமை மகிழ்ச்சி அளிப்பதாகவும் மாகாண மக்களுக்கு நன்மைகளை ஏற்படுத்த அயராது பாடுபட்டதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

1990 ஆம் ஆண்டில் முதல் தடவை ஆர்னட் சட்டமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.



# கனடாவில் மோசடிகளில் ஈடுபட்ட அரசாங்க ஊழியர்கள் பணி நீக்கம்

கனடாவில் பாரியளவில் மோச டிகளில் ஈடுபட்ட அரசாங்க ஊழியர் கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கனடிய வருமான முகவர் நிறுவ னத்தில் கடமையாற்றிய சுமார் 330 பேர் இவ்வாறு பணி நீக்கம் செய் துள்ளனர்.

கொவிட் பெருந்தொற்று காலத்தில் மோசடியான முறையில் கொடுப்பனவு களை பெற்றுக்கொண்டதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.




இந்த சம்பவங்களுடன் தொடர்பு டைய மேலும் 600 பணியாளர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத் தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கொவிட் காலத்தில் தொழில்களை இழந்தவர்களுக்கு அரசாங்கம் மாதாந்த கொடுப்பனவாக 2000 டொலர் களை வழங்கியிருந்தது.

இந்தக் கொடுப்பனவு தொகையை மோசடியாக பெற்றுக்கொண்டவர்களே தற்பொழுது பணி நீக்கம் செய்யப்பட் டுள்ளனர்.

# பெண்ணை கொலை செய்தவருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை

கனடாவில், அழுக்கு ஆடை தொடர்பில் வீட்டில் ஏற்பட்ட வாக்கு வாதம் முற்றி கொலையில் முடிந்த சம்பவமொன்றுடன் தொடர்புடைய நபருக்கு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

பெண் ஒருவரை படுகொலை செய்த இந்த நபருக்கு நீதிமன்றம் பத்தாண்டு கால சிறைத்தண்டனை விதித்த துடன், தண்டனைக் காலத்தின் பின்னர் நாடு கடத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

பிரிட்டிஸ் கொலம்பியாவின் சர்ரே பகுதியில் 39 வய தான ஹார்பீரிட் சிங் என்ற நபரே இவ்வாறு தண்டிக் கப்பட்டுள்ளார்.

மனைவியின் சகோதரியான பால்ஜிட் காவுர் என்ற பெண்ணை ஹார்பீரிட் சிங் படுகொலை செய்துள்ளார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் மேலும் இரண்டு பேர் காயம டைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



வீட்டிற்குள் அழுக்கான காலுறை அணிந்தமை தொடர்பில் ஏற்பட் வாய்த்தர்க்கம் குடும்ப முரண்பாடாக மாறி இறுதியில் கொலையில் முடிந்துள்ளது என வழக்கு விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.



## கனடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடிய பாதுகாப்பு புலனாய்வு சேவை யின் புதிய பனிப்பாளராக டேனியல் ரொஜர்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

புலனாய்வு சேவையின் பணிப்பா ளராக கடமையாற்றி வந்த டேவிட் விக்னலட் ஓய்வு பெற்றதை தொடர்ந்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு தலையீடுகளிலிருந்து பாதுகாத்தல், தொடர்பாடல் கட்டமைப்பு கள் தொடர்பில் கவனம் செலுத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை இந்த பாதுகாப்பு புலனாய்வு சேவை முன்னெடுத்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹர்தீப் சிங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறது. இந்தியாவுக்கு எதிராகஆதா ரங்கள் இல்லை என்பதை கனடா பிரத மரே ஒப்புக் கொண்டுள்ளார். இதற்கு மேல் விளக்கம் அளிக்க தேவை யில்லை." - என்று தெரிவித்துள்ளார்.

கனடாவின் கன்சர்வேட்டிவ் கட்சி யின் தலைவர் பியாரே வெளியிட்ட அறிக்கையில் கூறும்போது-

"எங்கள் கட்சிக்கு வெளிநாட்டு சக்திகளுடன் (இந்தியா) தொடர்பு இருப் பதாக பிரதமர் ஜஸ்டின் குற்றம் சாட்டி உள்ளார். எங்கள் கட்சியை சேர்ந்த சில குறிப்பிட்ட எம்பிக்கள் வெளிநாட்டு சக்திகளுடன் தொடர்பில் இருப்பதாக வும் கூறியிருக்கிறார்.

பிரதமர் ஜஸ்டின் பொய்களை மட் டுமே பேசி வருகிறார். வரும் நாடா ளுமன்ற தேர்தலில் வெற்றி பெற அவர் சீனாவின் உதவியை நாடுவது பகிரங்கமாக தெரிகிறது. லிபரல் கட்சி யின் தலைமை பொறுப்பில் இருந்து அவரை நீக்க அந்த கட்சியின் மூத்த தலைவர்கள் விரும்புகின்றனர். ஆட்சி நிர்வாகத்தின் தோல்விகள், கட்சியில் எழுந்துள்ள அதிருப்திகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்ப பிரதமர் ஜஸ்டின் ஆதாரமற்ற பொய் களை கூறி வருகிறார்." - என்றார்.